15th December 1961]

Sri M. S. SELVARAJAN : ஸார், தற்போதைய திட்டப்படி தலே மதகு திறந்து 84 நாட்களுக்குப் பின்னர் கடைசிக் குளத் திற்குப் பாயும் கஷ்டம் உணரப்படுகிறது. ஏழு குளங்கள் கடந்து கடைகோடி குளத்திற்குப் போகும் அமைப்பு இப்போது அமுலில் இருக்கிறது. ஒவ்வொரு குளத்தையும் நேரடியாக பாசன வாய்க் காலில் இணைக்க அரசாங்கம் திட்டமிடுமா ? இதற்கு என்னென்ன அடிப்படை தேவை என்று அரசாங்கம் ஜனங்களுக்கு தெரி விக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : சில திட்டங்கள், ஒரு கம்மா யிலிருந்து இன்னொரு கம்மாயிக்கு பாய்வதால் அதிகச் செலவு ஏற்படாது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேரடியாக ஒவ்வொரு குளத்திற்கும் பாய வாய்க்கால் வெட்டவேண்டு மென்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டும். அதைப்பற்றி இந்த நேரத்தில் ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

L.I.M. Association (representation)

* 2383 *Q.*—Sri R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received the memorandum, dated 9th June 1961 from the L.I.M. Association (Madras State) and, if so, what action has been taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes, sir. The requests made in the memorandum are under examination by Government.

Sri R. SRINIVASA IYER : ஸார், இந்தக் கேள்வி பற்றி ஒரு பதில் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே சர்க்காரிலே ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டால் எல்.ஐ.எம்.-கள் பஞ்சா யத்துக்குப் போகவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலே செய்யும் எல்.ஐ.எம். கள் ஊஸ்ட் செய்யப்படாமல் இருக்க ஏதாவது வழிவகை செய்யப் படுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதிலே கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது மெமோராண்டம் வந்தது பற்றி. அதைப் பற்றி பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம் யாரையும் ப்ரைமரி ஹெல்த் சென்டரிலே டாக்டர் களாகப் போட முடியாது—எம்.பி., பி.எஸ்.-களைத்தான் போட வேண்டும். காரணம், இதற்கு வெளிநாட்டு உதவி வருவதால் எம். பி. பி.எஸ். தான் போடவேண்டும். இப்போது கொடுத் திருக்கக்கூடிய மெமோராண்டம் பரிசீலனையில் இருக்கிறது. இப்போது கேட்கப்பட்ட கேள்வியும் பரிசீலனையில் அடங்கி இதுவும் பரிசீலிக்கப்படும்.